
லயன்
காமிக்ஸ்
மின்னல் மனிதன்!
ரூ.5/-
லயன்
தீபாவளி
மலர்

# ரூ.5000 பரிசு!

லயன் பிரியர்களே,

தொடர்ந்து இவ்வருடம் வரயிருக்கும் லயன் காமிக்ஸ் பின்னட்டைகளில் நமது காமிக்ஸ் ஹீரோக்களின் வண்ணப்படம் இருக்கும். அவற்றை ஒவ்வொன்றாக வெட்டி எடுத்து ஆல்பத்தில் மாதா மாதம் ஒட்டி வைத்து வர வேண்டும். அதுமட்டுமல்ல- அந்தக் குறிப்பிட்ட ஹீரோவிடம் உங்களுக்குப் பிடித்த விஷயத்தைப் பற்றி இரண்டு வரி எழுத வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட ஆல்பத்தை எங்களுக்கு அனுப்பி வையுங்கள்! குலுக்கல்முறையில் தேர்ந்தெடுக்கப்படும் 10 அதிர்ஷ்டசாலி வாசகர்களுக்கு தலா ரூ. 500/- பரிசு உண்டு!


அடுத்த 500 பேர்களுக்கு ஆறுதல் பரிசு உண்டு!

ஆகையால் தவறாமல் படங்களைச் சேகரித்து வாருங்கள்!

மீண்டும் அடுத்த மாதம் சந்திக்கலாம்!

அன்புடன்,
விஜயன்

# மின்னல் மனிதன் மானிக்ஸ்!





அந்த இனிமைச் சூழல்-இதோ இன்னும் ஓரிரு நிமிடங்களில் அரக்கத்தனமாக அழிக்கப் படப் போகிறது-
டாடி-அந்த விமானம் ரொம்ப தாழ்வாக பறக்கிறது பாருங்கள்-
ஆமாம்-ஏதோ சிக்கல் ஏற்பட் டிருக்கக்கூடும்!
விமானம் இன்னும் கீழிறங்கி தாழப் பறந்தபோது அதிலிருந்து ஓர் உருவம் கீழே நீருக்குள் பாய்ந்தது-
மறுகணம்
ஐயோ- அணைக் கட்டின் மீது மோதப் போகி-றது!



அணைக்கட்டின் சுவரை அது தகர்த்து விட்டது. வேகமாக கரையை நோக்கித் துடுப்புப் போடு!
நீரோட்டத்தின் வேகம் அதிகமாகி விட்டது!
ஐயோ!
சுவரில் ஏற்பட்ட பொத்தலின் வழியே அணை நீர் அருவியாய் கொட்டிய்து.
க்ராஷ்
அணை மொத்தமும் தகர்ந்து விட்டது!


காட்டுத் தனமாக கொட்டிய நீர், கீழே புதிதாக
நிர்மாணிக்கப்பட்டிருந்த மின் உற்-
பத்தி நிலையத்தை சின்னாபின்னப்படுத்தி
அடித்துச் சென்றது-
லான் பெர்ரி பள்ளத்தாக்கு
முழுக்க நாசமாகிப்போனது-
இதற்கிடையே நீர்த் தேக்கத்தின் ஓர்
ஓரத்தில், கொஞ்சமும் அலட்டிக்
கொள்ளாத ஓர் உருவம்கரையேறியது.



கொஞ்ச காலமாய்- பிரிட்டிஷ் உளவுத் துறையில் பணியாற்றிய ரோபோ மனிதன்- மானிக்ஸ்தான் அவ்வுருவம்.
சமீபத்தில் நாச சக்திகளிடம் பிடிபட்டு, இயக்கத்தில் மாற்றம்செய்யப்பட்டு, அவர்களுடைய ஊழியனாக செயலாற்றி வருகிறது.
'ஸ்மோக்' என்பது ஒரு பயங்கர வாதக் கும்பல், வன்முறை மூலம் உலக நாடுகளிடமிருந்து அதிகாரத்தைக் கைப்பற்றி பூமியை சொந்தம் கொண்டாட அந்தக் கும்பலுக்கு ஆசை-!
மானிக்ஸிடமிருந்து டைரக்டருக்கு- பணி செவ்வனே செய்து முடிக்கப் பட்டு விட்டது. திரும்பி வந்து கொண்டிருக்கிறேன்.
7a


அதே சமயம்
பிரிட்டிஷ் உளவுத்துறை தலைமையதிகாரி வால்டேரின் அலுவல் அறையில்-
லாங் பெர்ரி சமாச்சாரம், பயங்கர வாதம் எவ்வளவு மோசமாக வேரூன்றி வருகிறது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு-
நீர்த் தேக்கத்திற்கு மேலே பாறையில் இரு உல்லாசப் பயணிகளின் பிணத்தை போலீஸார் கண்டு பிடித்திருக்கிறார்கள்.
நீர்ப்பரப்பிலிருந்து காலடி தடம் ஒன்று கிளம்பி அந்த இடம் வரை சென்றிருக்கிறது!
பயங்கரவாதிகளோ?
இல்லை! விமானத்திலிருந்து அவ்வாறு குதித்து, உயிரோடு தப்பிக்கும் ஆற்றல் யாருக்குமே கிடையாது- ஒரே ஒரு நபரைத் தவிர!
அது யாரென்று எனக்கு நீ சொல்லாமலே தெரியும்!
எது நடக்கக்கூடாது என்று பயந்து கொண்டிருந்தேனோ அது நடந்து விட்டது. 'ஸ்மோக்' கும்பல் மானிக்ஸை நமக்கு எதிராகத் திருப்பி விட்டிருக்கிறார்கள்!
8அ


பிரிட்டிஷ் உளவுத் துறை அந்த சம்பவத்தின் பின்னணியை ஆராயத் தொடங்கியது.
இந்த அணையை அந்தக் கும்பல் தகர்த்தது ஏன்? அவர்களுடைய நோக்கம் தான் என்ன?
வேறொரிடத்தில் 'ஸ்மோர்க்' கும்பலின் மறைவிடத்தில்
ரோபோ திரும்பி வந்து சேர்ந்து விட்டது டைரக்டர்!
திட்டமிட்டபடி கச்சிதமாக காரியத்தை செய்து முடித்து விட்டாய் மானிக்ஸ்!
உன் செயல்திறனை பாராட்டுகிறேன் மானிக்ஸ்!



ஒரு கேள்வி-லான் பெர்ரி அணைக்கட்டை தகர்க்க எனக்கு உத்தரவிடப்பட்டது ஏன்? நம்முடைய இலட்சியத்தோடு ஒப்பிடுகையில் இது அற்பத்தனமாக படுகிறது!
எதிரிகளின் மறைவிடம் கரீபியன் கடலில் ஜன நடமாட்டமில்லாத ஒரு தீவில் இருந்தது.
சரியான கேள்வி-மானிக்ஸ்! இந்த நாசவேலை-உன் விசுவாசத்திற்கு வைக்கப்பட்ட ஒரு பரீட்சை-அவ்வளவுதான்! பரீட்சையில் நீ தேறி விட்டாய்! இனி, நம் இலட்சியப் பாதையில் முதல் பணியை நீ மேற்கொள்ளப் போகிறாய்!


நம் இலக்கு-பிரிட்டன்! நம் இலட்சியம்-ஆட்சியை கைப்பற்றுவது!
அதற்கு நிறைய பணபலம் தேவைப்படுகிறது. எனவே உன் முதல் பணி-தேவைப் படும் பணத்தை கொண்டு வந்து சேர்ப்பது!
ஸ்மித் தம்பதியினர் தேவையான தக-வல்களை உனக்கு விளக்கமாக எடுத்துச் சொல்வார்கள்!


'ஏகிட்ரென்ச்' கப்பல் இன்றிரவு ஸவுத்தாம்டன் துறைமுகத்தை விட்டு புறப்படுகிறது-நியூயார்க் நோக்கி. அதில் நூறு மில்லியன் பவுண்டுகள் பெறுமானம் உள்ள தங்கம் செல்கிறது! அந்த தங்கத்தை நீ திருடி வரவேண்டும். இதை சாதிப் பதற்கு கையாள வேண்டிய யுக்தியை நீயே தீர்மானித்துக் கொள்ளலாம்!


மானிக்ஸின் கம்ப்யூட்டர் மூளையில் பிரிட்டிஷ் உளவுத் துறைக்கான விசுவாசம் சரிவர அழிக்கப்படாத-தால் கொஞ்சம் மிஞ்சி இருந்தது. சொல்லப்பட்ட அடாத காரியத்தை செய்ய மாட்டேன் என்று மறுக்கத் தூண்டியது அந்தப் பழைய விசுவாச உணர்வு.
ஆனால் அந்த உணர்வு வெளிப்படாமல் அமுங்கிப் போனது.
மானிக்ஸ் தயாரா?
தேவையான கருவிகள், ஆள் பலம் எல்லாம் உங்கள் வசம் இருக்கின்-றனவா மிஸ்டர் ஸ்மித்!
உனக்கு என்ன வேண்டுமென்று சொல்- உடனே ஏற்பாடு செய்-கிறேன் மானிக்ஸ்!
ஆல்ரைட்- என்னுடைய வழிமுறையை விளக்குகிறேன்- கேட்டுக் கொள்ளுங்கள்!


இதற்கிடையே
அதில் ஒரு விஷயம் கவனித்தாயா பரோட்டோ? அணையைத் தகர்த்தது மானிக்ஸ் என்றால்- அப்படித்தான் தடயங்கள் உறுதிப்படுகின்றன- ஏன் தான் வந்து போன சுவடுகளை அழிக்காமல் விட்டுச் சென்றான்?
அந்தக் காரியத்தைச் செய்தது மானிக்ஸ்தான் என்று நாம் அறிந்து கொள்வதற்காகவா?
அப்படித்தானிருக்கும் ஸார்! இப்போது 'ஸ்மோக்' கும்பலின் ஆதிக்கத்தில் இருந்தாலும் நம்மிடம் அவனுக்கு இருந்த விசுவாச உணர்வு பூரணமாக அழிக்கப்படவில்லை என்று தோன்றுகிறது!
மேலோட்டமாக 'ஸ்மோக்' கும்பலின் ஆணைகளை நிறைவேற்றி வந்தாலும் உள்ளுக்குள் எதிர்ப்பு உணர்வு இருக்கிறது!
நமக்கு சாதகமான அம்சம் அது!
ஆனால் எந்த வகையில் அது நமக்கு உதவியாக இருக்கப் போகிறதோ- தெரியவில்லை!


அன்றிரவு. ஸவுத்தாம்டன் துறைமுகப் பகுதியினுள் யாரும் அறியாவண்ணம் நைச்சியமாக புகுந்த ஓர் உருவம் வாய்ப்பை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தது.
சற்றைக்கெல்லாம்
பயணத்தை தொடங்கலாமா காப்டன்!
கிளம்பச் சொல்!
14a


'அதையடுத்து அந்தக் கப்பல் அசைந்தாடி நகர்ந்தது. ஆபத்தான ஒரு பேர்வழியை தன்னோடு அழைத்துச் செல் வதை கொஞ்சமும் அறியாமல்
சாட்சி சொல்ல யாரும் எஞ்சி இருக்கக் கூடாது!
பெட்டக அறையை நெருங்கியது மாணிக்ஸ்.
கையில் துப்பாக்கியோடு இரண்டு காவலாளிகள்! தங்கம் அந்த அறையில் தான் இருக்கக் கூடும்!
மறுகணம் இரண்டு விஷ ஊசிகள் பறந்தன.
வெட்டுண்ட மரம் போல் சரிந்தனர் அந்த இரு காவலாளிகளும்.





சாட்சி சொல்ல யாரும் இருக்கக் கூடாது!
இந்தத் துப்பாக்கி எனக்குப் பயன் படக் கூடும்!
முதலில் கப்பலை வசப்படுத்திக் கொள்ள வேண்டும்!
ஹே-எ-என்ன இது-
காப்டன்- நான் சொல்கிறபடி செய்- இல்லையேல் மண்டையோடு எகிறி விடும்!


இவனை அடித்து விழ்த்த நாஞுயிற்று- காப்டன்!
சத்!
உனக்கு என்ன வேண்டும் சைத்தானே?
அவசரபபடாதே! சொல்கிறேன்!



உடனடியாக செய்தித் தொடர்பு சாதனங்களை நொறுக்கித் தள்ள வேண்டும். உதவி கோரி செய்தி போகக் கூடாது!
ஹேற்- உ-உன் முகம்- நீ எவ்வகை ஜந்து?
அந்த ஆராய்ச்சியெல்லாம் உனக்கெதற்கு அப்பனே!
ஒரே அடியில் காப்டன் வழிக்கு வந்துவிட்டார்-
மேற்கு வட-மேற்காக கப்பலை திருப்பி ஓட்டு!
ஒரு மணி நேர பயணத்திற்குப் பின்-
எஞ்சினை அணைத்துவிட்டு, எல்லோரையும் மேல் தளத்துக்கு வரச் சொல்!
EKKITRENCH
18


காப்டனின் உத்தரவு! அனைவரும் உடனே மேல்தளத்திற்கு வரவும்!
எல்லோரும் வந்து விட்டார்களா?
ஆ- ஆமாம்!
தானிய கிடங்கை திறக்கச் சொல்!
என்ன தான் நடக்கிறது?
ஹைஜாக்கிங் என்று தோன்றுகிறது!
இந்த சைத்தான் சொல்கிறபடி நடந்து கொள்ளுங்கள் - இவனொரு கொலை வெறியன்!



அந்தத் தானியக்
கிடங்கினுள் செல்-
லுங்கள். உள்ளே
போக மறுப்பவர்-
கள் நின்ற இடத்-
திலேயே சுடப்படு-
வார்கள் ஜாக்கி-
ரதை! தங்கத்தை
கவர்ந்து செல்ல
வந்திருக்கிறேன்.



எங்களை என்ன
செய்யப் போகிறாய்?
தங்கத்தை நான் எடுத்துக் கொண்டு
வெளியேறும்வரை உங்களை உள்ளே
போட்டு அடைத்து வைக்கப் போகி-
றேன்!



பெட்டக அறையை நோக்கி விரைந்தது மானிக்ஸ்.
கிடங்கை இறுகத் தாழிட்டு விட்டேன்! கப்பல் இப்போது என் வசம்!
ஹைய்யா- தங்கப் பாளங்கள்!
BULLION
BULLION





அதோ - சமிக்ஞை விளக்கு!
உச்ச வேகத்தில் அருகே செல்!
சாதித்து விட்டாய் மானிக்ஸ்!
பாராட்டுவதைப் பிறகு வைத்துக் கொள்ளலாம்! முதலில் தங்கத்தை அந்தக் கப்பலுக்கு மாற்ற ஏற்பாடு செய்யுங்கள்!
EKKITR
ஆயிற்று - கடைசி பெட்டியும் வந்து விட்டது. இனி நீ எங்களோடு வந்து சேர்ந்து கொள்ளலாம்!


முடிந்தது கச்சிதமாக!
மறுநாள் காலே கடலோர ரோந்து ஹெலிகாப்டர் ஒன்று தன் பணியில் ஈடுபட்டிருந்த போது-
த்ரீ-டு-பேஸ்- தரை தட்டிக் கிடக்கிறது கப்பல்- எக்-கிட்ரென்ச் போல் தோன்-றுகிறது!
ஒரு ஆளே கீழிறக்கி அந்த கப்பலுக்கு அனுப்புகிறோம்-
'தொம்-தொம்' என்று தட்டும் சப்தம் வருகிறது காப்டன்- உள்ளே யாரோ இருக்கி றுர்கள்-உயிரோடு!



செய்தி கிடைத்த சில நிமிடங்களுக்கெல்லாம் அங்கே விரைந்து வந்து சேர்ந்தன - அருகே சென்று கொண்டிருந்த சில கப்பல்கள்!
மணற்பாங்கான இடத்தில் தரை தட்டியதால் உள்ளே இருப்பவர்கள் உயிர் பிழைக்க அதிர்ஷ்டம் வாய்த்திருக்கிறது!


தானிய கிடங்குப் பகுதியின் கதவு தகர்க்கப் பட்டது-
உயிர் பிழைப்போம் என்ற நம்பிக்கையை நாங்கள் இழந்து விட்டிருந்தோம்.
தெய்வம்போல் வந்து காப்பாற்றி விட்டீர்கள்!
இவ்விபரங்கள் பிரிட்டிஷ் உளவுத்துறை தலைமைய கத்துக்கு உடனே எட்டியது-
உயிர் பிழைத்தவர்கள் விவரித்த அடையாளம், சந்தேகத்திற்கு இடமின்றி அந்த விஷமத்தை செய்த நபர் மானிக்ஸ் தான் என்று உறுதிப் படுத்துகிறது ஸார்-
அங்கே நேரில் சென்று பார்ப்போம்-வா-
சில நிமிடங்களுக்குப்பின் உளவுத்துறை மேலதிகாரிகளை சுமந்துகொண்டு விரைந்தது ஒரு ஹெலிகாப்டர்-
தப்பிப் பிழைத்தவர்களுக்கெல்லாம் சிகிச்சையளிக்க ஏற்பாடாகியிருக்கிறது ஸார்-
அம்மாதிரி ஒரு நபரை நான் இதற்கு முன் பார்த்ததேயில்லை ஸார்- முகத்தில் ஒரு பாதியில் தோலோ சதையோ இருக்கவில்லை- மாறாக உலோக இணைப்புகளும், வயர்களுமாகப் பின்னிக் கிடந்தன. அவன் அல்லது அது என்ன வகை ஜந்துவோ?
எதிரியை விரைவிலேயே பிடித்து விடுவோம் காப்டன- அவனைப் பற்றி உங்களுக்குத் தெரிந்த விபரங்களைக் கூறுங்கள்!


கேட்டீர்களல்லவா இன்ஸ்பெக்டர்? தாக்குதல் நடத்தியவர்களைப் பற்றி பத்திரிக்கைகளுக்கு எந்த விபரமும் இப்போது கொடுக்க வேண்டாம்!
சரி சார்!
இது மானிக்ஸின் சேஷ்டைதான்- சந்தேகமேயில்லை! உயிர் பிழைக்க வாய்ப்புக் கொடுத்து, கப்பல் மணற்பகுதியில் கரைதட்டு- மாறு செய்து இருக்கிறான் மானிக்ஸ்!
உதவும் நோக்கில்- வேண்டும் என்றே- செய்த பிழை அது!
இன்னும் வேறு எதையாவது பயல் விபரீத- மாக செய்து தொலைக்குமுன் முடக்கிப் போட எதாவது ஒரு யுக்தியைக் கையாள வேண்டும்!
HOSPITAL
இதற்கிடையே, 'ஸ்மோக்' கும்பலின் மறைவிடத்தில்-
உன் பணி செவ்வனே முடிக்கப்- படவில்லை. சில சாட்சிகளை விட்டு வந்திருக்கிறாய்- அது என்?



கப்பலின் முன் அறையினுள் காற்று அடைபட்டிருந்திருக்கலாம் டைரக்டர்! அதன் காரணமாக முகப்புப் பகுதி மூழ்கவில்லை போலும். தற்செயலாக நிகழ்ந்து விட்ட ஒரு சம்பவம்!
மறுபடியும் இப்படியொரு பிழை நேரிட்டால் நான் பொல்லாதவ-ளாகி விடுவேன்- ஜாக்கிரதை!
இவள் தான் 'ஸ்மோக்' கும்பலின் தலைவி மோனி!
உன் முதல் பணி முற்றுப் பெற்றது. நீ கொண்டு வந்திருக்கும் தங்கம் நாம் பிரிட்டன் மீது தாக்குதல் நடத்த தேவையான பொருளாதாரத்தை உறுதிப்-படுத்தி விட்டது. அடுத்து உன் திறமையை வேறொரு வித்தியாசமான முறையில் ; பயன்படுத்த உத்தேசித்திருக்கிறேன். கேந்திரமான இலக்குகளை தேர்ந்தெடுத்து அழித்து முடிந்த வரை நீ கூடுதலான நாசத்தை ஏற்படுத்த வேண்டும்!
அழிவையும், நாசத்தையும் அதனால் விளையும் பீதியையும் குழப்பத்தையும் தாங்க முடி-யாமல் பிரிட்டிஷ் மக்கள் 'நாட்டின் பொறுப்பை ஏற்-றுக் கொண்டு நீங்கள் தான் எப்படியாவது அழிவிலிருந்து எங்களை காப்பாற்றவேண்டும் என்று வந்து நம் காலில் விழ வேண்டும்!



அடுத்து வந்த நாட்களில் நாட்டின் பல பாகங்களிலும் விதம் விதமான விபரீதங்கள் விளைந்தன.
ஆற்றுக்குக் கீழே போகும் குகைச் சாலையின் சுவரில் பெரிய ஓட்டை மூலம் நீர் புகுந்தது.
வடகடலில் பெட்ரோலிய கிணற்றுப் பகுதியில் திடீரென்று தீப்பற்றிக் கொண்டது.
அங்கங்கே அரசின் கையாலாகாத்தனத்தை கண்டித்து கூட்டங்களும் போராட்டங்களும் நடந்தன.
நம் தாய்நாடு இப்படி அல்லோலகல்லோலப்பட்டு வேகமாக நசித்து வருவதை 'ஸ்மாக்', இனியும் சும்மா வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்காது. ஏ அரசே- அராஜகத்திற்கு உடனடியாக ஒரு முற்றுப் புள்ளி வை. இல்லையேல் பொறுப்பை எங்களிடம் ஒப்படைத்து விட்டு ஓடிப் போ!
நிலைமை மோசமாகிக் கொண்டே வருகிறது பாஸ்! நாம் உடனடியாக ஏதாவது சாதிக்க வேண்டும்! இல்லையேல்-
பதறாதே நான் ஏற்கனவே நடவடிக்கையில் இறங்கி விட்டேன்!


உளவுத் துறை அலுவலகக் கட்டிடத்தில் ஓர் இரகசிய ஆய்வுக் கூடம் இருந்தது.
மானிக்ஸ் எதிரிகளிடம் அகப்பட்டுக் கொண்ட நாள் தொட்டு இந்த முயற்சி வேகமாக முன்னேறி வருகிறது!
மானிக்ஸ் போன்று சர்வ வல்லமை படைத்த சக்தியை முறியடிக்க வேண்டுமானால் அந்த அளவுக்கு வலிமை கொண்ட இன்னொரு சக்தியை உருவாக்குவது தான் ஒரே வழி- அதைத் தான் விஞ்ஞானிகள் அல்லும் பகலும் பாடுபட்டு உருவாக்கி வருகிறார்கள்!
ஆம், இன்னொரு மானிக்ஸ்!



மானிக்ஸ்-
எழுந்திரு!
இதோ!
என் குரலை அடையாளம் தெரிந்து கொள்ள முடி-கிறதா மானிக்ஸ்?
ஓ- பிரிட்டிஷ் உளவுத் துறை தலைமை அதிகாரி மிஸ்டர் வால்டேரின் குரல் இது- சரிதானே? எனக்கு இடப்பட்டுள்ள பிரதான கட்டளை- 'உங்களுடைய ஆணைகளுக்கு மட்டுமே கட்டுப்பட்டு செயல்பட வேண்டும்!'


இந்த மானிக்ஸில் கூடுதலான ஒரு பாதுகாப்பு அமைப்பை பொருத்தியிருக்கிறோம்-யாராவது உங்களுடைய குரலை இமிடேட் செய்து ஆணை பிறப்பித்தால் சுய அழிவு கண்ட்ரோல் இயக்கம் பெற்று நொடியில் மானிக்ஸ் அழிந்து போய்விடும்!
அதாவது முதல் மானிக்ஸை கைப் பற்றிக் கொண்டதுபோல் இதை எதிரிகள் வசப்படுத்திக் கொள்ள முடியாது-
ஆமாம்!
இரண்டு மானிக்ஸ்"களும் நேருக்கு நேர் சந்தித்தால் சண்டை போட்டுக் கொள்ளும் அல்லவா?
பொருமை என்பதெல்லாம் மனிதர்களுக்குத்தான்! என்றல்ல!
புதிய மானிக்ஸை நடைமுறை சோதனைக்கு உட்படுத்த வேண்டும்- ஏற்பாடு செய்
மோல்ஸ் வொர்த்தின் அலுவலக அறையில்-
யாரது ஹம்பரியா? நான் சொல்வதை குறித்துக் கொள்...
ம்ம்- ஆயிற்று? மிக அவசரம்- உடனே ஏற்பாடு செய்!
31


அன்று பிற்பகலில்-ஓர் இரகசிய மைதானத்தில்-
புலிப் பாய்ச்சலாக தாண்டிவிட்டான் பார்!
ஆற்றலில் பழைய மானிக்ஸை விட ஒன்றரை மடங்கு வலியது-
44885
நம் கை ஓங்கி விட்டது!


பழைய மானிக்ஸ் எதிரிகள்வசம் சிக்கிய பிறகு நாட்டின் பல்வேறு மையங்களில் நாசம் விளைவித்து வருகிறது. அதை நீ தேடிக்கண்டுபிடித்துஅழிக்கவேண்டும்- எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில்-
எவ்வித முன்திட்டமும் இன்றி இஷ்டத்திற்கு இலக்குகளைத் தேர்ந்தெடுத்து இன்று இங்கே, நாளை எங்கோ என்கிற மாதிரி அலைகிறவனைத் தேடிக் கண்டு பிடிப்பது எங்ஙனம்?
அதன் அடுத்த இலக்கு நான் தான்! ஆமாம்- நானே தான்!
எ-என்ன? நீ நீயா? ஊஹூம்- நம்பும்படியாக இல்லை. நீ உருப்பெற்றிருக்கிற விஷயமே அதற்குத் தெரியாதே!
தவறு! பழைய மானிக்ஸைப் பற்றி எதிரிகள் எப்படி தெரிந்து கொண்டார்கள் என்ற விஷயத்தை சற்றே சிந்தித்துப் பாருங்கள் மிஸ்டர் வால்டேர்! உங்களுக்கும் உங்களுடைய அந்தரங்க ஊழியர்களுக்கும் மட்டும் தெரிந்த இரகசியம் அது- இல்லையா?
துரோகி யாரோ இங்கே இருப்பதாகக் குறிப்பிடுகிறாயா? அந்த இரகசியம் எனக்கும் மோல்ஸ் வொர்த்துக்கும் மட்டுமே-
மோல்ஸ்வொர்த்! நீ-
ஆமாம்- இவரே தான்!


நிஜம் என்றாவது வெளிவரும் என்பதை அறியாதவனல்ல நான். ஆனால் தெரிந்து கொண்ட உண்மையை வெளியில் சொல்ல நீ உயிரோடு இருக்கப் போவதில்லை வால்டோ!
மோல்ஸ்வொர்த் வால்டரை நோக்கிச் சுட்ட போது குறுக்கே பாய்ந்தது மானிக்ஸ.
அதன் உலோக உடம்பில் பட்டு எகிறித் தெறித்த தோட்டா மோல்ஸ்வொர்த்தின் நெற்றியில் பாய்ந்தது.
ஆ ஆ!!
இப்போதாவது ஒத்துக் கொள்கிறீர்களா? பழைய மானிக்ஸுக்கு என்னைப் பற்றித் தெரியும் என்று! என்னை அழிக்க அவன் உடனடியாக முயற்சிகளை மேற்கொள்ளக் கூடும்!
ஹூம்- நிறைய விஷயங்களை இவனிடமிருந்து கேட்டறியும் வாய்ப்பு கைநழுவிப் போய் விட்டது!



அவசரமாக நீ செய்து முடிக்க வேண்டிய முக்கியமானதொரு பணி ஒன்று உண்டு மானிக்ஸ்!
அங்கே 'ஸ்மோக்' கும்பலின் மறைவிடத்தில்-
உன்னைப்போலவே இன்னொரு ரோபோவை- உன்னை அழிப்பதற்கு என்றே-பிரிட்டிஷ் உளவுத்துறையினர் உருவாக்கியிருப்பதாக செய்தி வந்துள்ளது. அது தற்சமயம் தளப்பயிற்சி மைதானத்தில் இருக்கிறது.
கும்பலின் தலைவி மோனியின் எதிரே நின்று கொண்டிருந்தது பழைய மானிக்ஸ்-
அது முழு அளவில் பயிற்சி எடுத்துக் கொண்டு செயலாற்றத் தொடங்கு முன் அங்கே நீ சென்று அதை அழிக்க வேண்டும்!
உத்தரவு டைரக்டர்!


இதற்கிடையே பிரிட்டிஷ் உளவுத் துறையின் இரகசிய பாசறையில்-
அவன் உன்னை நெருங்கவே முடியாதவாறு இந்த இடத்தைச் சுற்றி படைவீரர்களை நிறுத்த எண்ணியுள்ளேன்.
வேண்டாம்! சிக்கல் முளைக்கலாம்-நானே ஒற்றைக்கு ஒற்றை பார்த்துவிடுவது தான் வழி!
வெரிகுட்! உனக்கு ஒரு சகாயம் என்னவென்றால் அந்தமானிக்ஸின் பழைய விசுவாசம் முற்றிலுமாக அழிக்கப்படவில்லை. இருவரும் கைகலக்க நேரிட்டால்இந்த அம்சம் சாதகமாக இருக்கும்!
வெளியே சென்று சுற்று வட்டாரத்தை நுணுக்கமாக ஆராய்ந்தது புதிய மானிக்ஸ்.
அவன் வரட்டும்- அக்கு வேறு ஆணி வேறாகப் பிய்த்து எறிகிறேன்!
இதோ இங்கே பாதுகாப்பு அம்சம் சற்று குறைவாக இருக்கிறது. எனவே, உள்ளே புக அவன் இந்த இடத்தைத் தான் தேர்ந்தெடுக்கக்கூடும்!
அருகே ஓரிடத்தில் மறைவாக பதுங்கியவாறு காத்திருந்தது- எதிரியின் வரவை நோக்கி!
பல மணி நேர இடைவேளைக்குப் பின் சப்தம் கேட்டு சுறுசுறுப்படைந்தது புதிய மானிக்ஸ்-


பயல் வருகிறான்!
பழைய மான்க்ஸ சுற்று வேலிக்கு வெளியே வந்து கொண்டிருந்தது.
வேலியில் மின்சாரம் பாய்ந்து கொண்டு இருக்கக் கூடும்!
'தம்' பிடித்து ஜிவ்வென்று மேலெழும்பியது.
நில் அப்படியே!
நான் விரித்த வலையில் வகையாக மாட்டிக் கொண்டு விட்டாய். என்னிடமிருந்து நீ தப்பவே முடியாது!


ஒரு கணம் இருவரும் ஒருவரை ஒருவர் முறைத்துக் கொண்டு நின்றனர். பின்னர்.
ஆக்ரோஷமாக சண்டை போடலாயினர்.
பட்!
தொலைந்தாய்!



இதெப்படி?
புதிய மானிக்ஸ் விட்ட குத்தை தாங்கிக் கொள்ள முடியாமல் பழைய மானிக்ஸ் விசையோடு போய் சுவரில் மோதியதில் சுவர் சரிந்து பெரிய இடைவெளி உருவானது.
அவன் சொல்வது நிஜம்தான்-என்னை விட அவன் பலசாலி. இந்த சண்டை தொடர்ந்தால் எனக்கு இங்கேயே தான் சமாதி! எனவே-
தப்பியோடுகிறான் விடக் கூடாது!


தூரத்திப் பிடித்து மீண்டும் ஒரு குத்து!
செத்தேன்!
உயிர் பிழைத்தால் போதும் என்று குதிகால் பிடரியில் அடிக்க ஓட்டம் பிடித்தது பழைய மானிக்ஸ்-
இரயில் பாதை! வேக இரயில் ஒன்று வந்து கொண்டிருக்கிறது!
ஊஹூம். உன்னை தப்பி ஓட விட மாட்டேன்!



கொஞ்சம் கொஞ்சமாக இடைவெளி
குறைந்து கொண்டே வந்தது.
இடைவெளி இன்னும் பத்து மீட்டர் தான்!
ளையில் விரைந்து கொண்டிருந்த இரயிலின் உள்ளே இருந்த
பணிகளுக்கு அந்த ரோபோக்கள் தொட்டுப் பிடித்து விளையாடிக்
காண்டிருந்தது தெரியாது.
உச்சத் திறனில் ஓடியும் இடைவெளி குறையவில்லையே! என்ன செய்வது?
ரே வளையில் பச்சை விளக்கு
ன்று எரிந்து கொண்டிருந்ததை
ண்டது புதிய மானிக்ஸ்.
சட்டென்று அதன் கண்களிலிருந்து
கதிரலைகள் பிறிட்டன.
41a


கதிரலைகள் தாக்கியதும் பச்சை விளக்கு அணைந்து எச்சரிக்கை சிக்னல் பளிரிட்டது.
ஹே என்ன இது- சிக்னல் திடீரென்று மாறி விட்டதே? எதிரே லைனில் ஏதோ ஆபத்து!
அச்சா! நான் எதிர்பார்த்த மாதிரியே ரயிலின் வேகம் குறைந்து விட்டது!
புதிய மானிக்ஸ் இன்னமும் விடாமல் தன்னை துரத்தி வருகிற உண்மையை அறியாத பழைய மானிக்ஸ் அசிரத்தையாக இநந்தது.
உன்னை காயலான் கடைக்கு அனுப்பி விட்டுத் தான் மறு வேலை!


ஐயோ-
ண்டவாளத்தை ஒட்டி குவித்து
.ந்த செப்பனிடும் கருவிகள்
'தொம்' என்று விழுந்தது
ழுய மானிக்ஸ்.
என் சக்தி மையம் பழுதடைந்து விட்டது!


சண்டையை நீடிப்பதில் அர்த்த
மில்லை- உடனடியாக பயலை
ஒழித்துக்கட்டியாக வேண்டும்!



மீண்டும் இரண்டு ரோபோக்களும் கைகலந்தன-
சில நிமிடங்களுக்கே நீடித்தது அந்தச் சண்டை- முடிவில்-
தொலைந்தான்!
க்ராக்!



இவன் ஒரேயடியாக ஓய்ந்து போகுமுன் நான் சீக்கிரமாக செயல்படவேண்டும்-
மாணிக்ஸ் II - டு - கண்ட்ரோல்! எதிரி ரோபோவை அடித்து விழுத்திவிட்டேன்-வேறொரு காரியம் பாக்கியிருக்கிறது அதையும் முடித்துக்கொண்டு திரும்பிவந்து சேருகிறேன்.
முதலில் இயக்க மையத்தை அழித்துவிட வேண்டும்-




பழைய மானிக்ஸின் நினைவுப் பதிவேட்டிலிருந்த அத்தனை விபரங்களையும் தன் பதிவேட்டிற்கு மாற்றிக் கொண்டது புதிய மானிக்ஸ்.
'ஸ்மோக்' கும்பலின் இரகசிய மறைவிடம் எங்கே உள்ளது என்ற விபரமும், தலைவி மோனி பற்றிய விபரமும் அதில் அடக்கம். அத்தோடு-
பயங்கரவாதிகளோடு இர்கசியமாக ஒத்துழைத்து வரும் ஸ்மித் தம்பதியினர் பற்றியும்-
பழைய மானிக்ஸ் ஏற்கனவே நாசம் விளைவித்த சில இலக்குகள் பற்றிய விபரங்களும் அதில் இருந்தன.



பின்னர் உளவுப் படை தலைமையகத்திற்குத் திரும்பியது.
புதிய மானிக்ஸ் இப்பொழுது தயார்!
இனி நீங்கள் மானிக்ஸை அழைத்துச் செல்லலாம்.
உன்னிடமிருந்து நிறைய கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. வா-மானிக்ஸ்! என்னுடைய அலுவலகத்திற்குப் போவோம்
மானிக்ஸ் தான் சேகரித்து வந்த தகவல்கள் அனைத்தையும் வெளியிட்டது.
சாதித்து விட்டாய் மானிக்ஸ்! நீ திரட்டி வந்துள்ள தகவல்களை வைத்து ஸ்மோக் கும்பலை நிர்மூலப்படுத்தி விடலாம். வெல்டன்!
முற்றும்.


இன்ஸ்பெக்டர் கருடா துப்பறியும்
பாங்க் கொள்ளை!


நண்பகல் பாரத் வங்கிக்கு முன் ஒரு நீல நிறக் கார் வந்து நின்றது.
பாரத் பேங்க்.
பாரத் பேங்க்
நீண்ட நேரம் ஆகுமா?
எந்த நேரமும் வரலாம்.





பிரகாஷ் பப்ளிஷர்ஸ் நிறுவனத்தின் சார்பாக லயன் காமிக்ஸை வெளியிடுபவரும், ஆசிரியரும்: S. விஜயன்.
முகவரி: பிரகாஷ் பப்ளிஷர்ஸ், த. பெ. எண்: 374, சிவகாசி-626 123. போன்: 21159. அச்சிட்டோர்: தி விஜய் புக்ஸ், சிவகாசி 626 123. வெளியீடு எண்:72



இது ஒரு கொள்ளை.
துப்பாக்கி சுடும் சப்தம் கேட்டு மக்கள் பீதியால் ஓடினார்..
டுமீல்
பாங்க் அதிகாரி போலீஸுக்கு போன் செய்தார்.
உதவி வருமுன் கொள்ளையடித்துக் கொண்டு நீலநிறக் காரில் தப்பிச் சென்றனர் கொள்ளையர்

52a


பறக்கும் படை பொலிஸ் வண்டி.
நகரில் பாங்க் ஒன்று கொள்ளையிடப்பட்டுள்ளது.
கொள்ளையரின் வண்டி வெள்ளதுன் துறைப் பக்கம் சென்றது.
பொலிஸார் வண்டி கொள்ளையர் வண்டியை துரத்தியது.
அதோ அந்தக் கார் விரைந்து செல்!


கொள்ளையர் வண்டியில்
வேகமாய் போ போலீஸ்!
பயப்படாதே, அவர்கள் நம்மை பிடிக்க முடியாது
கொள்ளையர் வண்டி வேகமாய் செல்ல போலீஸ் வண்டி போக்குவரத்து காரணமாக நிறுத்தப்பட்டது.
ஹலோ! 273 கொள்ளைப் பொருளுடன் மெர்சிடஸ் நீலநிற வண்டி மூன்று நபர் -களுடன் லேமர் ரோட்டின் திருப்பத்தில் செல்கிறது.
இன்ஸ்பெக்டர் ஈகிறும், ஹவில்தார் நாயக்கும் வயர்லெஸ் செய்தியை கேட்கின்றனர்
நகரில் பட்டப்பகலில் கொள்ளை!



அதோ நீல மெர்சிடஸ்
குயிக்காக் கொல்லீ.
இன்ஸ்பெக்டர் ஈகிள் கொல்லீயர் வண்டியை பின்தொடர்ந்தார்.
அவர்களுக்கு போலீசாரின் திறமையை சரியாகப் புரியவில்லை
போலீஸ் ஜீப் வருகிறது. விரைவாக வண்டியை செலுத்து.
நல்லது. பின்னால் வெகுதூரம் உள்ளனர். அதற்குள் வண்டியை மாற்றிக் கொள்வோம்.



ஜொன்ரியர், மகாலட்சுமி பாலத்தருகே நின்ற மற்றொரு காரைத் திருடிக்கொண்டு பொருளை அதில் மாற்றிக்கொண்டு சென்றனர்.
அவர்கள் வேறுகாரில் சென்றிருக்க வேண்டும்
அவர்களுடைய நீல நிறக்கார் இங்கே நிற்கிறது.
இன்ஸ்பெக்டர் ஈகிள் ஜொன்ரியரை பின் தொடர்ந்தார்.
போலீஸ் இன்ஸ்பெக்டர் விடமாட்டார் போலும்.
பெட்டியை திறந்து பணத்தை கைப்பைக்கு மாற்று


56a



பணம் பைக்கு மாற்றப்பட்டது
போலீஸ் நெருங்கி விட்டது
ஜக்! திருப்பத்தில் குதித்து விடு! நம்இடத்தில் சந்திப்போம்!
குதி!
தொம்!


அந்தக்காரில்
ஒருவன் குறைகிறன்.
பயத்தில் மயங்கி
விழுந்திருப்பான்.
கிஸ்மீ, நீ குனைக்
அவனீ பின்தொடர்ந்து
செல்.
சரி, நான் ஓட்டப்
பந்தய வீரன், நான்
அதோ ஓடுகிறன். எப்பொழுதும்
போல் இன்ஸ்பெக்டர் அவா,
சரியாகவே கூறியிருக்கிறர்.



ஹவில்தார
திருடனை துரத்துகிறார்.
கல்லூரியில் ஓட்டப்பந்தய
வீரனாய் இருந்தது இப்போது
உதவுகிறது.
திருடன் முள்கம்பி வழியாக
தப்பி ஓடுகிறான்
தப்பிவிட்டான். சர்ட்டின்
கிழிந்த பகுதி கம்பியில்
மாட்டியிருக்கிறது.
மக்கள் நெரிசலில் இன்ஸ்பெக்டரும்
கொன்சியர் காரை பின்தொடர்ந்து.
செல்ல இயலவில்லை. கார் சென்றுவிட்டது.
ஹலோ! 273
இங்கே என் xxx1234
காரை தவறவிட்டேன்.


இன்ஸ்பெக்டரும், ஹவில்தாரும் போலீஸ் கன்ட்ரோல் அறையில் சந்திக்கின்றனர்.
நான் திருடனை தவற விட்டாலும், அவன் சட்டையின் ஒரு பகுதியை வைத்துள்ளேன்.
நல்லது செய்தாய். நம் போலீஸ் நாய் உதவக்கூடும்.
போலீஸ் நாயுடன் சட்டையின் கிழிந்த கம்பியருகே வந்தனர்
நாய் மோப்பம் பிடித்து பெட்ரோல் பங்க் வரை அவர்களை கூட்டிச் சென்றது.
இதற்கு மேல் நாயினால் மோப்பம் பிடிக்க முடியவில்லை.


பெட்ரோல் பங்க் ஊழியரிடம் கேட்டோம்.
இப்போது இந்தப்பக்கம் ஒரு கார் வந்ததா?
ஆம். ஒரு கறுப்புச் சட்டைக்காரர் வந்தார். ஒரு காரில் சென்றார்.
அவர் ஏறிச் சென்ற கார் எங்கள் வாடிக்கையாளர் செல்வரத்தினம் அவர்களு-டையது. அவர் முகவரி தருகிறேன்.
நாயை திருப்பி அனுப்பிவிட்டு இன்ஸ்பெக்டரும் ஹெவில்தாரும் செம்பூரில் உள்ள ரத்தினமில் தொழிற்சாலைக்கு சென்றனர்.
இதற்கிடையில் மாலைப்பத்திரிக்கையில் செய்தி வந்தது.
தினச் செய்தி
பட்டபகலில் பாங்க் கொள்ளை!



ரஞ்சிதாவின் அலுவலகத்தில்.
ஆம். ஒரு கிரிஜன் தாதார் சர்க்கிள் வரை காரில் இடம் கேட்டான். அவனை நண்பகல் 12 மணிக்கு அவ்விடத்தில் இறக்கி விட்டேன்.
அவன் பம்பாயை விட்டு வெளியே சென்றிருக்கக்கூடும்.
BOMBAY PUNE
எதற்கு தாதாவில் இறங்க வேண்டும்? பம்பாய் சென்ட்ரலில் இறங்கியிருக்கலாமே?
அப்படியானால் பூனா வாடகை வண்டி நிலையம் சென்றிருக்க வேண்டும்.
இன்ஸ்பெக்டர் ஜ-வின் டாக்ஸி ஸ்டேண்டுக்கு சென்றார்.
ஆம், ஒரு கருச்சட்டை அணிந்த உத்தம்சிங் என்ற வாலிபன் காந்தலா செல்ல ஒரு டாக்ஸி பேசி எடுத்துச் சென்றான்.



பெயர் தவறாக இருக்கலாம் ஆனால் அவன் காந்தலாவில் தான் இருக்க வேண்டும்.
அப்படியானால் மாலீ காந்தலாவில் பிடித்து விடலாம்.
இன்ஸ்பெக்டர் ஈ.சிறும், ஹவில்தாரும் பம்பாய் அருகேயுள்ள மலைவாசஸ் தலமாகிய காந்தாலாவுக்குச் சென்றனர்.
ஹலோ A73 காந்தாலாவுக்குச் செல்கிறோம்.
ஐயா, எனக்கு பசிக்கிறது. ஏதேனும் சாப்பிட்டுச் செல்லலாமா?
எனக்குத் தெரியும். நீ ஒரு கிறுக்கிருக்கிறாய். காந்தாலாவுக்கு சென்று சாப்பிடுவோம்.


இரண்டு மணி நேரத்தில் காந்தாலாஸ் போய்ச் சேர்ந்தனர்.
முதலில் ஹோட்டலுக்குச் செல்வோம்.
இன்ஸ்பெக்டர் ஹோட்டல்களில் விசாரித்த பின்.
HOTEL MALA
சக்ரவர்த்தி ஹோட்டலுக்கு வந்தனர்.
நல்ல நிகழ்ச்சி.
இங்கே உட்கார்ந்து சிறிது சாப்பிடலாம்.
கிளர்கள் மேல்நாட்டு நடனம் ஆடிக்கொண்டிருந்தனர்.
யாராவது உள்ளாரா?
எனக்கு அட்டையை கிழித்துக் கொண்டு ஓடியவள் மட்டுமே தெரியும்.


நடனம் முடிந்தது.
ஹோ!
நண்பர்களே, விருந்துண்டு மகிழ்வோம்.
பலருக்கு விருந்தளிக்கும் அவர் பெரும் பணக்காரராய் இருக்க வேண்டும்.
சிறிது நேரம் கழிந்தது.
கூட்டாளி எங்கே. அவன் வந்ததும் நாம் நழுவிடுவோம்.
அதோ போலீஸ்.
கொள்ளையடித்த பணம் எங்கே?
அது என் அறையில் உள்ளது.


அப்போது மற்றொரு கூட்டாளி வந்தான்.
அதோ அவன்!
ஹவில்தாரைக் கண்டதும் அவன் ஓடுகிறான்.
ஹவில்தார் பின் தொடர்ந்தார்.
காலையில் தான் தப்பினாய். இப்போது அகப்படுவாய்..
விருந்து படைத்தவர் நழுவுகிறாரே, ஏன்?


இருவரும் அறையை நோக்கி ஓடினர்.
சீக்கிரம், வையய் எம்.
ஜன்னல் வழியாக சீக்கிரம் வா
கூட்டாளியை என்ன செய்வது?
அவன் அடையாளம் கண்டு கொண்டதாய் சொல்லவில்லையே
கொள்ளையடித்த பணத்துடன் வருகின்றனர்.


நில்லுங்கள். தப்பியோடினால் சுடுவேன்.
இன்ஸ்பெக்டர் ஈ-யின் இருவரை ஓட்டம் வீழ்த்தினர்.
அடுத்தவனைப் பிடிப்பேன்.
இவனும் பிடிபட்டு விட்டான் சார்
முற்றும்